செ.வெ.எண் -51 நாள்:27.02.2018

# அரியலூர் மாவட்டத்தில் குடும்ப நல அறுவை சிகிச்சை குறித்து மருத்துவர்களுக்கான பயிற்சிக் கூட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் குடும்ப நலம் மற்றும் பொது சுகாதாரத்துறையின் சார்பில் குடும்ப நல அறுவை சிகிச்சை தரம் உறுதி குறித்து, அரசு மருத்துவமனை மருத்துவர்கள், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் மற்றும் தனியார் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்யப்படும் மருத்துவமனை மருத்துவர்களுக்கான ஆய்வுக்குழு மற்றும் பயிற்சிக் கூட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் குத்துவிளக்கேற்றி, இன்று (27.02.2018) தொடங்கி வைத்தார்கள்.

**இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் குடும்ப நலம் அறுவை சிகிச்சைகளை தரம் மேம்படுத்துவதற்காக ஆலோசனை மற்றும் பயிற்சிகள் இக்கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.

குடும்ப நலம் அறுவை சிகிச்சை மேற்கொள்வதில் சிசு மரணம் மற்றும் மகப்பேறு மரணங்களை முற்றிலும் தடுத்திடும் நோக்கத்தில் இப்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், வரும் நாட்களில் மாவட்டத்தில் சிசு மரணம் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

குடும்ப நலம் அறுவை சிகிச்சைக்காக கிராம அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டு, மகப்பேறு தாய்மார்களுக்கு குடும்ப நலன் மற்றும் அறுவை சிகிச்சை தொடர்பான விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பயிற்சியில் கலந்துகொண்ட மருத்துவர்கள் தங்கள் மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியர்கள், மருத்துவ பணியாளர்களுக்கு போதிய பயிற்சிகள் அளித்து, மகப்பேறு தாய், சேய் நலன் காக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், இணை இயக்குநர் (குடும்ப நலன்) மரு.சசிகலா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வீ.சி.ஹேமசந்த்காந்தி, அரியலூர் அரசு தலைமை மருத்துவமனை மருத்துவர் மரு.ரமேஷ், வட்டார மருத்துவ அலுவலர்கள், தனியார் குடும்ப நல அறுவை சிகிச்சை மருத்துவர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.